**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 617/2025 |
| Prosecution Witness | : | **அ.சா.**3 |
| Name | : | **சரவணராம்** |
| Father's / Husband Name | : | ராதாகிருஷ்ணன் |
| Address | : | மலையாளப்பட்டி, வேப்பந்தட்டை |
| Age | : | 44/2026 |

**<u>தேதி : 04.02.2026</u>**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.ச. மோகனபிரியா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**<u>1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் பிரிவு 355 B.N.S.S. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது.</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் பாக்குதட்டு தயாரிக்கும் தொழில் செய்துவருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா. 2 ஆகியோர்கள் எனக்கு பழக்கமாவார்கள். இவ்வழக்கின் எதிரிகள் இன்று இந்நீதிமன்றத்திற்கு வரவில்லை. அவர்களை எனக்கு தெரியும். அ.சா. 1, அ.சா.2 கவுண்டர்பாளையத்தில் கோழிப்பண்ணை வைத்து நடத்திவருகிறார்கள். இவ்வழக்கின் எதிரிகளை அ.சா.1 கோழிப்பண்ணையில் முட்டை கொள்முதல் செய்வது மூலம் எனக்கு தெரியும். 2023ம் ஆண்டு அ.சா.1 என்னிடம் எதிரிகள் முட்டை கொள்முதல் செய்த தொகைக்கும், அவர்கள் அனுப்பிய Screenshot தொகைக்கும் வித்தியாசம் இருப்பதாகவும் சரிபார்க்கும்படி சொன்னார். நாங்கள் சரிபார்த்தபோது சுமார் 90 லட்சம் ரூபாய் பணம் குறைவாக இருந்தது.

அப்போதுதான் எதிரிகள் அனுப்பிய Screenshot கள் போலியாக அனுப்பியுள்ளது தெரியவந்தது.

நானும், அ.சா.1 ம் எதிரிகளிடம் முதலில் சென்று இரண்டுதடவை கேட்டபோது தவறு நடந்துள்ளது. சரிசெய்து பணத்தை தருகிறேன் என்று சொன்னார்கள். ஆனால் பணம் கொடுக்காததால் மூன்றாவத தடவை சென்று கேட்டபோது நான் உனக்கு தரவேண்டிய பணத்தில் 10 லட்சம் ரூபாயை ரவுடிகளிடம் கொடுத்தல் உனது குடும்பத்தையே கொலை செய்துவிடுவார்கள் என்று மிரட்டினார்கள். பின்னர் இதுசம்மந்தமாக அ.சா.1 புகார் கொடுத்தார். வழக்கு சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய பணித்தபோது குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார்கள். அதனால் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.